Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
CC NO. 417/**2022**
**Depostitions of PW- 16 Witness for**

| | |
|---|---|
| Name | சங்கிலி |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26 th day of December 2023.

Signature of Witness.

26.12.2023

எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை–**

நான் தற்போது வடபட்டி கீழுரில் குடியிருந்து வருகிறேன். நான் மதுபான பாரில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 சுப்பிரமணியத்தேவர் எனக்கு தெரியாது. எதிரிகளைத் தெரியும். தேதி, மாதம் நியாபகம் இல்லை 2013 ம் வருடம் எனது மச்சினன் சேவுபாண்டியை பார்ப்பதற்காக சாமிநத்தத்திற்கு போனேன். நான் அன்று மதியம் 12.00 மணியளவில் அங்கு போன போது சுப்பிரமணியத்தேவரின் வீட்டினை சின்னமுனியாண்டி, அவரது மகன் பாண்டி, ஜேசிபி டிரைவர் ஆகியோர்கள் சேர்ந்து இடித்துக்கொண்டிருந்தார்கள். இது

சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

வடபட்டியில் இருந்து சாமிநத்தம் 8 கி.மீட்டர் இருக்கும். நான் அன்றாட கூலி வேலை செய்கிறேன் என்றால் சரிதான். சாமிநத்தம் திருவில்லிபுத்தூரில் இருந்து சிவகாசி செல்லும் ரோட்டின் மேல் உள்ளதென்றால் சரிதான். நான் சம்பவஇடத்திற்கு சென்று பார்த்தபோதுதான் யார், யார் யார் வீட்டினை இடித்தார்கள் என்று தெரிந்து கொண்டேன். அந்த வீட்டின் உரிமையாளர் யார் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை மறுநாள் விசாரித்தார்கள். நான் வீட்டை இடித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சுப்பிரமணியத்தேவர் யார் என்று எனக்கு தெரியாது.